# இறையியல் (பாடம்-3)

தேவனின் தன்மையை அறிந்துக்கொள்ளுதல் (தொடர்ச்சி)

எங்கும் இருப்பவர்

தேவன் எங்குமிருப்பவர் எனும்போது அவர் எல்லாவற்றிலும் இருப்பவர் எனும் அனைத்திறைக் கொள்கையின் பிழையான கருத்திலிருந்து இதனை நாம் வேறுப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். சடப்பொருட்கள் கடவுள் அல்ல என்பதனால், அவர் எல்லாவிடத்திலும் இருக்கிறார் என்று கூறும்போது நம் கூற்றுக்கு நாம் போதிய விளக்கம் கொடுக்க வேண்டும். உலகம் தேவன் இல்லையென்று கூறினாலும், அவர் உலகின் எல்லா இடங்களிலும் இருப்பவர்.

வானாதி வானங்களும் அவரைக் கொள்ளாது (1 இராஜா 8:27, 2 நாளா 2:6) அவர் வானத்தையும், பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ (எரே 23:24) வானம் அவருக்கு சிங்காசனம் பூமி அவருக்கு பாதபடி (ஏசாயா 66:1, அப் 7:49) வானத்திலும் பாதாளத்திலும், சமுத்திரத்திலும் அவர் இருக்கிறார் (சங்கீதம் 139:8-10) அவர் சமீபத்துக்கு மாத்திரமல்ல தூரத்திற்கும் தேவன் (எரே 23:23-24) அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே (அப்போஸ்தலர் 17:27)

கடவுள் எங்குமிருப்பவர் எனும்போது, அவருடைய ஒரு பகுதி ஓரிடத்திலும் மற்றைய பகுதி வேறொரு இடத்திலும் உள்ளதெனக் கருதலாகாது. அவர் எல்லாவிடங்களிலும் ஒரே சமயத்தில் முழுமையாயிருக்கிறார். அத்தோடு அவர் பூகோள ரீதியாக எவ்வித வரையறைக்கும் உட்பட்டவரல்ல. எப்பகுதியும் அவர் இல்லாத இடம் என கூறமுடியாது. எப்பகுதியிலும் அவர் முழுமையற்றிருக்கிறார் என்று வாதிட முடியாது.

கடவுள் எங்குமிருக்கிறார் என்பதை நம்மால் கிரகித்துக்கொள்ள முடியாதிருப்பதற்கான காரணம் அவர் ஆவியாயிருப்பதும், இட வரையறையற்ற நிலையை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாமலிருப்பதுமேயாகும்.

அவர் தாமாகவே இருப்பவர்

உலகத்திலிருக்கிற ஒவ்வொரு பொருளும் வேறு யாராவது ஒருவரையாகிலும் வேறு ஏதாவது ஒன்றையாகிலும் சார்ந்திருக்கிறது. ஆனால் தேவனோ எவரையும் எதையும் சாந்திருக்கிறவர் அல்ல. உலகம் தோன்றுமுன் அவர் தாமாகவே இருந்தவர். அவர் தம்மில் தாமே ஜீவனுடையவர் (யோ 5:26) இருக்கிறவராகவே இருக்கிறேன் (யாத் 3:14) என அவர் கூறியது அவர் தாமாகவே இருக்கிறவர் என்பதை புலப்படுத்துகிறது. Berkhof குறிப்பிட்டது போல அவர் தாமாக இருப்பது மட்டுமல்ல, மற்ற அனைத்தும் தன்னைச் சார்ந்திருக்கும்படி செய்துள்ளார். ஆனால் அவர் எதையும் சார்ந்திருப்பவரல்ல. யெகோவா எனும் தேவனுடைய பெயர் இத்தன்மையை புலப்படுத்துவதாயுள்ளது (சங் 94:17, ஏசாயா 40:18, அப் 7:25, ரோமர் 11:36) அவர் எதையும் சாராதிருக்க மற்றவையனைத்தும் அவரினூடாகவே இருக்கின்றன என்பதை சுட்டிக் காட்டுகின்றது. (ரோமர் 11:33-34, தானி 4:35, ரோமர் 9:19, எபே 1:5, வெளி 4:11, சங் 115:3, சங் 33:11) பார்க்கவும்.

இறைவனின் குணாதிசயங்களை அறிந்து கொள்ளுதல்

கடவுளின் தன்மைகளை அறிந்து கொண்ட நாம் அடுத்து அவருடைய குணாதிசயங்களைப் பற்றியும் அறிந்திடவேண்டும். அப்போது மட்டுமே அவர் எப்படிப்பட்டவர் என்பதைப் பற்றி

முழுமையாக அறிந்திடலாம். Thomas Watson குறிப்பிட்டது போல், "கடவுளின் மகிமை" அவருடைய தன்மையிலேயே தங்கியுள்ளது. அவரது குணவியல்புகள் ஒவ்வொன்றும் அதன் பிரகாசமான ஒளிக்கதிர்களாகும்.

இறைவனுடைய குணவியல்புகளை அல்லது அவரது தன்மைகளை நாம், அறிந்துகொள்ளவேண்டுமாயின், அவருடைய வார்த்தையை ஆராய்ந்து பார்ப்பதன் மூலமே சாத்தியமாகும். அவருடைய ஒரு சில தன்மைகளை இயற்கையினூடாக (அப் 19:1, ரோமர் 1:20) அறிந்து கொள்ளக்கூடியதாயிருப்பினும், அவரைப் பற்றி சரியாக அறிந்து கொள்ள வேண்டுமாயின், நாம் வேதபுத்தகத்திடமே வரவேண்டும். காரணம் தேவன் தன்னுடைய தன்மைகளை, தன்னுடைய வார்த்தையிலேயே வெளிப்படுத்தியுள்ளார்.

1. இறைவனின் அறிவு - Knowledge of God

இறைவன் எல்லாமறிந்தவர் (Omniscient) எவ்விடத்திலும், எக்காலத்திலும் உள்ள எல்லாவற்றையும் எப்போதும் அவர் அறிவார். முக்காலமும் அவர்முன் மறைவானவையல்ல. எக்காலமும் அவர் அறிந்ததே, மூவுலகிலுமுள்ள அனைத்தையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்கு மறைவானது எதுவுமேயில்லை. எதையுமே அவரிடமிருந்து மறைத்துவிட முடியாது. உண்மையில் இறைவனுடைய இத்தகைய அறிவு "நமக்கு மிகுந்த ஆச்சரியமானதாயுள்ளது (சங் 139:6) அவருடைய அறிவு அவரிலேயேயுள்ள அறிவாகும். அதாவது, அவருடைய அறிவு, அனுபவம், ஆராய்ச்சி என்பவைகளினாலோ, அன்றி வேறெங்குமிருந்தோ பெற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

அவருடைய அறிவு பூரணமானது, குறைவற்றது, அவரே அறிவுமயமானவர். மற்றவையனைத்தும் அவரிடமிருந்தே அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அவருடைய அறிவு பிழையற்றது, தவறாது.

இறைவன் எங்குமிருப்பவர் (Omnipresence) ஆதலால் எல்லா இடங்களிலுமுள்ள எல்லாவற்றையும் அறிந்தவராயிருக்கிறார். "கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது. H.C.Thiessen ஆதிமுதலிருந்தே முழுமையாகவும் உண்மையாகவும் அவர் அனைத்தையும் அறிவார். (ஏசாயா 46:10 பார்க்க) அவருடைய அறிவு அளவில்லாதது. (சங்கீதம் 147:5)

(அ) மனிதனுடைய நடைகளையெல்லாம் அவர் அறிவார் (உபா 2:7)

நாம் போகும் வழியை அவர் அறிவார் (யோபு 23:10) அவர் நம் வழிகளையெல்லாம் எண்ணுகிறவர் (31:4) நம் வழிகளெல்லாம் அவருக்கு முன்பாக இருக்கின்றது (நாம் வாழுமிடங்களையும் (சங் 33:13) நம் வாழ்நாட்களின் காலத்தையும் (37:18) அவர் அறிந்திருக்கிறார். நம்முடைய உருவம் இன்னதென்றும் அவர் அறிவார். (சங் 103:14) நம் வழிகளெல்லாம் அவருக்குத் தெரியும் (சங் 139:3)

(ஆ) மனித மனதில் எழும் சிந்தனைகளை அவர் அறிவார் (எரே 11:5)

நம் நினைவுகளை தூரத்திலிருந்தே அவர் அறிவார். (சங் 139:2) நம்முடைய தேவைகளை அவர் அறிவார் (மத் 11:27). அவர் இருதயங்களைப் பார்க்கிறவர் (1 சாமு 16:7) உள்ளந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரும் (வெளி 2:23)

சோதிக்கிறவருமாயிருக்கிறார் (எரே 17:10) அவர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார் (1 நாளா 28:19) நம் நாவில் சொல் பிறவாததற்கு முன்பே அவர் அதையெல்லாம் அறிந்திருக்கிறார். (சங் 139:4) நம் நினைவுகளை அறிவார் (ஏசா 66:18) வார்த்தைகள் நம் செவிகளில் பேசுவது போல, மானிட நினைவுகள் கடவுளின் செவிகளில் பலமாக பேசும்.

(இ) மனிதர்கள் இரகசியமாய் செய்யும் காரியங்கள் அனைத்தையும் அவர் அறிவார்

நான் அவர்கள் கிரியைகளை அறிந்திருக்கிறேன் என அவரே கூறியுள்ளார் (ஏசாயா 66:18). (உ-ம் ஆகானின் களவு, ஆபேலின் கொலை, சாராளின் நகைப்பு, தாவீதின் பாவம்) "எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒழித்துக் கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்கிறார் (எரே 23:24). (சங்கீதம் 139:1,2, 7-10 ஒப்பிட்டுப் பார்க்கவும்). ஆம் அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பு நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. (எபி 4:13) அவருக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது (சங் 139:12). இருளில் இருக்கிறதை அவர் அறிவார் (தானி 2:22)

(ஈ) இனி நடக்க இருக்கும் அனைத்தையும் அவர் அறிவார்.

இதனால் தான் இஸ்ரவேலின் எதிர்காலத்தை அவர் அறிந்திருக்கிறார் (ஏசாயா 46:10, தானி 2:7, மத் 24:25, அப் 15:18). இஸ்ரவேல் எடுக்கும் பிழையான மார்க்கம் (உபா 31:20) ஆட்சி (ஏசா 44:26, 45:7) மேசியாவின் வரவு (மீகா 5:2) துன்மார்க்கர் அவரை சிலுவையில் அறைதல் (வெளி 13:8, அப் 2:23, 3:18) என்பவற்றையெல்லாம் அறிந்திருந்தார். மனிதர்களின் தீயசெயல்கள் அனைத்தையும் அவர் முன்பே அறிந்தவர். உதாரணமாக ஆதாம் பாவம் செய்வான் என்பதை அவனைப் படைப்பதற்கும் முன்பே அறிந்திருந்தார். "உலகத்தோற்ற முதல் தேவனுக்கு தம்முடைய கிரியையெல்லாம் தெரிந்திருக்கிறது" (அப் 18:19).

ஆகார் குறிப்பிட்டது போல அவர் "நம்மைக் காண்கிற தேவனாக இருக்கிறார்" (ஆதி 16:13) A.w.Pink கடவுளை நம்மால் பார்க்க முடியாதிருப்பினும் அவரால் நம்மைப் பார்க்கக் கூடியதாயுள்ளது. என் தீய எண்ணங்கள் பாவச் செயல்கள் கீழ்ப்படியாமை, பின்மாற்றம், அனைத்தையும் அறிந்திருந்தும் அவர் என்னை நேசிக்கிறார் என்பது எத்தனை அதிசயமானது. என் கவலைகள், கஷ்டங்கள், கண்ணீர்கள், மனக்கசப்புகள், போராட்டங்கள் யாவற்றையும் அறிந்தவர் என்பது நமக்கு எத்தனை ஆறுதலானது. நான் செல்லுமிடங்களையெல்லாம் செய்யும் காரியங்களை எல்லாம், சிந்தனைகள் கனவுகளையெல்லாம், அவர் அறிபவராய் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்வது நமக்கு எத்தனை அவசியமானது.

இறைவனின் அன்பு

தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவா 4:8,16) A.w.Pink தேவன் அன்பு செலுத்துபவர் என்பது இதன் அர்த்தமல்ல. அவரே அன்பாக இருக்கிறார். John Stott: அன்பு செலுத்துவது அவருடைய செயல்களின் ஒன்று என்பதல்ல. அவருடைய சகல நடவடிக்கைகளும் அன்பினால் செய்யப்படுபவை என்பதே அதன் அர்த்தம்.

நமக்கு அருளப்பட்டிருக்கிற பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கின்றது எனும்போது, (ரோமர் 5:5) J.I.Packer சுட்டிக் காட்டியதுபோல, "தேவன்

மீது நாம் வைத்திருக்கும் அன்பல்ல, மாறாக நம் மீது அவர் வைத்திருக்கும் அன்பை அறிந்து கொள்வதற்கான அறிவே அதுவாகும்.

(அ) தேவனுடைய அன்பு எதையும் சார்ந்திருப்பதோ, எதிலும் தங்கியிருப்பதோ அல்ல. அவருடைய தன்மையே அன்பாயிருப்பதனால், (1 யோ 4:9,16) அவர் நம்மை நேசிக்கிறார். அநாதி சிநேகத்தால் நம்மை நேசித்த அவர் (எரே 31:3) நம்மை நேசிப்பதற்கு நம்மில் எதுவுமே அவரை கவரவில்லை. அதாவது நம்மில் எதையும் கண்டதினால் அவர் நம்மில் அன்பு செலுத்த ஆரம்பிக்கவில்லை. நம்மீது அன்பு செலுத்துவது அவருக்கு பிரியமாயிருந்தமையினாலேயே அவர் நம்மை நேசித்தார். (உபா 7:7-8). அவ்வன்பை நம்முடைய முயற்சியினால் சம்பாதித்துக்கொள்ள முடியாது.

J.I.Packer அன்பற்ற, அன்பு செலுத்தப்பட அருகதையற்ற, மக்கள் மீதே தேவன் அன்புள்ளவராயிருக்கிறார். அவருடைய அத்தகு அன்புக்கு ஆதாரவாக மக்களில் எதுவுமே இல்லை. அவர் நம்மை நேசிக்க காரணம் அது அவரது சித்தமாயும் விருப்பமாயுமிருந்தது. நம்மை நேசிக்க வேண்டும் எனும் சித்தம் கொண்டிருந்தமையினாலேயே அவர் நம்மை நேசித்தார்.

அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது (1 யோ 4:7). நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. (1 யோவான் 4:10). அவர் தம்முடைய குமாரனைக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். (3:16).

(ஆ) தேவனுடைய அன்பு வரையறைகளுக்குட்பட்டதல்ல, அது எல்லை கடந்தது, எல்லாரையுமே நேசிப்பது, அவருடைய அன்புக்கு பாத்திரவான்களாகாதவர்கள் எவருமேயில்லை. அவர் முழு உலகத்தையும் நேசிப்பவர். (யோ 3:16)

(இ) தேவனுடைய அன்பு நிபந்தனைகளுக்குட்பட்டதுமல்ல. இத்தகு அன்பையே இயேசு மத் 5:43-48ல் விளக்கியுள்ளார்.

(ஈ) தேவனிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலுமில்லாதிருப்பது போலவே (யாக் 1:17) அவருடைய அன்பும் மாற்றமடையாத, கூடிக்குறையாத அன்பாக உள்ளது. எதனாலுமே பிரிக்கவோ (ரோமர் 8:35-39) தணிக்கவோ (உன் 8:6-7) முடியாத அன்பாக உள்ளது. தேவன் மீது யாக்கோபு வைத்திருந்த அன்பு மாறிய போதிலும் அவனை சிநேகித்த தேவன். (ரோமர் 9:13) கடைசி வரை அவனை நேசித்தார். இயேசுவும் தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்த படியே (ஒருவன் தன்னை மறுதலிக்கப் போகிறான். இன்னுமொருவன் தன்னைக் காட்டிக்கொடுக்கப் போகிறான் என்பதை அறிந்தும்) முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார். (யோ 13:1)

இறைவனின் இரக்கம்

தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர் (எபே 2:4) அவர் மிகுந்த இரக்கமும் உருக்கமும் உள்ளவர் (யாக் 5:11) அவர் இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையுமுள்ளவர். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர் (யாத் 34:6-7). அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. (புலம் 3:22)

இரக்கம் என்பது துயருறுவோர். அல்லல்படுவோரின் இக்கட்டுகளின் பொருட்டு வெளிப்படுத்தப்படும் உணர்வாகும். பரிதாபம், அனுதாபம், காருண்யம், தயை என்பனவும் இதனுள் அடங்கும். Berkhof தேவனுடைய கிருபையானது, தண்டனைக்குட்பட்ட குற்றமுள்ள பாவிக்கு மன்னிப்பளிக்கப்படுகையில் அருளப்படுவதாகும். இக்கட்டுகளில் சிக்கித் தவிக்கும் மக்கள் மீது தேவன் பரிதாபப்படுவதனால், அத்தகு மக்களை ஆறுதல் படுத்துவதற்காக அவர் அவர்கள் மீது இரக்கமாயிருக்கிறார்.

நம் தேவன் இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதல்களின் தேவனுமாயிருப்பதனால் (2 கொரி 1:3) நாம் எத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டாலும், நமக்காக பரிதாபப்பட்டு தயைகூரும் தேவன் இருப்பது எவ்வளவு மன ஆறுதல், உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன் (ஏசாயா 54:7) என நம்மை ஆறுதல்படுத்துகிறார்.

கேள்விகள்

1. தேவன் எங்குமிருப்பவர் மற்றும் தேவன் தானாக இருக்கிறவர் என்கிறதான தேவனின் தன்மைகளைக் குறித்து இப்பாடத்தில் நீங்கள் கற்றுக்கொண்டவைகள் யாவை?
2. தேவனின் குணாதிசயங்களில் தேவனுடைய அறிவு என்கிறதான தலைப்பின்கீழ் கற்றுக்கொண்டவைகளை வசன ஆதாரத்துடன் கூறுக?
3. தேவனின் குணாதிசயங்களில் தேவனுடைய அன்பைப் பற்றி நீங்கள் இப்பாடத்தின் மூலமாக கற்றுக்கொண்டவைகளை வசன ஆதாரத்துடன் கூறுக?
4. தேவனுடைய அன்பிற்கும் தேவனுடைய இரக்கத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு என்ன என்று இப்பாடத்தின் மூலமாக நீங்கள் புரிந்து கொண்டதை கூறுக?